**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 10.12.2024 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

Selvaraj (PW 1)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

ஆஜர் எதிரிகள் மற்றும் ஒருவர் ஆகியோர் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் ஆவர். தற்போது என்னிடம் காட்டப்படும் கண்ணாடி துண்டுகள் எதிரிகள் எனது பெரியப்பா மகன் உமேஷ்பாண்டி மற்றும் எனது மைத்துனா் ஜெய்கணேஷ் ஆகியோர்களை தாக்கப் பயன்படுத்தி கண்ணாடி ஸ்லாப்புகளின் உடைந்த துண்டுகள் சாபொ1 முதல் சாபொ 4 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்பவத்தில் காயமடைந்த உமேஷ்பாண்டி என்பவர் எனது பெரியப்பா மகனாவார். ஜெய்கணேஷ் என்பவர் எனது மாமா மகனாவார். நான் நடத்திவரும் மளிகை கடை மணலியில் அமைந்துள்ளது. நான் சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் இருந்தேன். சம்பவம் நடந்த இடத்திற்கும் எனது கடைக்கும் இடையே சுமார் 1/2 கிமீ துாரம் இருக்கும். சம்பவம் நடந்த காலி மனையானது என்எஸ்கே நகரிலிருந்து சுமார் 10 முதல் 20 அடி துாரத்தில் அமைந்துள்ளது. சம்பவம் நடந்த இடத்திற்கும் மணலி காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 1 கிமீ துாரம் இருக்கும். நான் நடத்தி வரும் மளிகைக் கடைக்கும் மணலி காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 1 கிமீ துாரம் இருக்கும். சம்பவத்தை குறித்து ஜெய்கணேஷ் என்பவர் என்னை கைபேசியில் அழைத்து தெரிவித்தார். அந்த சமயத்தில் மணி மாலை சுமார் 3 இருக்கும். குறிப்பாக ஜெய்கணேஷ் என்பவர் என்னை எந்த கைபேசி எண்ணிலிருந்து என்னை தொடர்பு கொண்டார் என்றும் புகார் மற்றும் எனது வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். சம்மந்தப்பட்ட காலிமனை எனது அண்ணன் ஜெயராஜ் என்பவருக்கு சொந்தமானது. தனது சொத்தை அவர் பாஸ்கரன் என்பவரிடம் இருந்து வாங்கினார். குறிப்பாக எந்த தேதியில் அவர் அவ்வாறு வாங்கினார் என்பதை குறித்து எனக்கு தெரியாது. சம்பவ இடத்தின் அருகே உள்ள என்எஸ்கே தெருவில் நிறைய வீடுகள் அமைந்துள்ளன என்றால் சரிதான். சம்பவத்திற்கு காயமடைந்த நபர்களை அருகிலிருந்த மருத்துவா் டேவிட்மணி என்பவரின் ஆனந்த மருத்துவமனைக்கு

அழைத்து சென்றனர். அங்கு அவர்கள் இருவருக்கும் அரைமணி நேரம் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பிறகு தான் அவர்களை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து நான் புகாரளிக்க காவல் நிலையத்திற்கு சுமார் 4 மணியளவில் சென்றேன். நேரம் எனக்கு சரியாக நினைவில்லை. நான் சொல்லசொல்ல புகாரை காவல் நிலையத்திலிருந்த அதிகாரி ஒருவர் எழுதினார். அந்த அதிகாரியின் பெயர் எனக்கு தெரியாது.. நான் சொன்னவாறு நான் சொல்ல சொல்ல புகாரை அவர் எழுதவில்லை என்றும் போலிசார் எழுதிக்கொடுத்த புகாரில் நான் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. இடம் விற்பதற்காக நபர்களை அழைத்து செல்லும்போதெல்லாம் எதிரிகள் பிரச்சனை செய்து வந்தனர். எதிரிகளின் உறவினர் பாஸ்கரன் என்பவர்தான் அந்த நிலத்தை எனது அண்ணன் ஜெயராஜ் என்பவரிடம் விற்றார். அது சம்மந்தமாக எதிரிகள் பிரச்சனை செய்து வ்நதனர். பாஸ்கரன் என்பவர் எதிரிகளின் உறவினர் என்பவர் எனது அண்ணன் ஜெயராஜ் என்பவர் எனக்கு தெரிவித்தார். எந்தவகையில் உறவினர் என்று எனக்கு தெளிவாக தெரியாது. அந்த காலிமனை எனது அண்ணன் ஜெயராஜ் என்பவர் பெயரில் மட்டுமே வாங்கப்பட்டது. இதே சம்பவம் சம்மந்தமாக பூங்கொடி என்பவர் உமேஷ்பாண்டி மற்றும் ஜெய்கணேஷ் ஆகியோர்களுக்கு எதிராக புகார் அளித்ததன் பேரில் தொடரப்பட்ட வழக்கானது வழக்கு எண் 85/2022 ன் கீழ் திருவொற்றியூர் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்டதில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உமேஷ்பாண்டி மற்றும் ஜெய்கணேஷ் என்பவருக்கு எதிராக புகாரளித்தது குறித்து மட்டும் எனக்கு தெரியும். நான் அளித்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கையின் நகல் ஏதும் நான் பெறவில்லை. நான் சொன்னவாறு சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையே இருந்துவரும் முன்விரோதம் காரணமாக எதிரிகளுக்கு எதிராக நான் தவறாக புகாரளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சம்பவம் நடந்தபோது நான் மளிகை கடையில் இருந்தேன் என்றும் நான் இவ்வழக்கிற்காக சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.

சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்

S.C. No. 61 / 2022

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 10.12.2024 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Jai Ganesh (PW 2) | வயது | 34 |
| தந்தை பெயர் | Karuppasamy | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali , Chennai | | |

முதல் விசாரணை

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.08.2021 அன்று மாலை சுமார் 3 3.30 மணியளவில் நானும் எனது மைத்துனர் உமேஷ்பாண்டி என்பவரும் எனது மாமா ஜெயராஜ் என்பவருக்கு சொந்தமான இடத்தை பார்ப்பதற்காக சென்றோம். அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் உட்பட சுமார் 8 நபர்கள் வந்தனர், வந்தஉடனேயே உமேஷ்பாண்டியை ஒத்தா தேவிடியா பையா யார் இடத்தை யார் பார்க்க வருவது என்று கூறி சமரசம் மற்றும் ஆஜர் எதிரிகள் கட்டுமான பணிக்காக வைத்திருந்த கண்ணாடி ஸ்லாப்பை எடுத்து எனது மைத்துனர் உமேஷ்பாண்டியின் தலையில் தாக்கினார். நான் அதை தடுக்க சென்றபோது அந்த 4 நபர்கள், ஒத்தா தேவிடியா பையா இதோடு செத்துபோ எனக் கூறி என்னையும் கண்ணாடி ஸ்லாப்பால் தாக்கினர். எதிரிகள் எங்களிடம் தகராறு செய்து கொண்டிருந்தபோது நான் எனது மாமா ஜெயராஜ் என்பவருக்கு நான் கைபேசி மூலம் தகவல் கொடுத்தேன். நான் தகவல் கொடுத்ததன் பேரில் விஜயராஜ், ஜெயராஜ், எனது அண்ணன் ராமமூர்த்தி மற்றும் செல்வராஜ் மற்றும் சில நபர்கள் அங்கு வந்தனர். பெயர்கள் எனக்கு நினைவில்லை. எதிரிகள் என்னை தாக்கியதால் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு நான் மயங்கிவிட்டேன். எதிரிகள் உமேஷ்பாண்டி என்பவரை இடுப்பு, தலை, முகம் ஆகியவற்றில் தாக்கினார்கள். அதனால் அவருக்கும் காயங்கள் ஏற்பட்டது. எதிரிகள் எங்களை தாக்கியவுடன் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டனர். நாங்கள் தகவல் கொடுத்ததன் பேரில் அங்கு வந்த மேற்சொன்ன நபர்கள் எங்களை அருகிலிருந்த மருத்துவா் டேவிட்மணி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு,

எங்களுக்கு அதிகப்படியான காயங்கள ஏற்பட்டிருந்ததால அந்த மருத்துவமனையிலிருந்து அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். எதிரிகள் அந்த சமயத்தில் மதுபோதையில் இருந்தனர். எந்த காரணத்திற்காக எதிரிகள் எங்களை தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் கண்ணாடி துண்டுகள் எதிரிகள் என்னை மற்றும் உமேஷ்பாண்டியை தாக்க பயன்படுத்திய கண்ணாடி ஸ்லாப்புகளின் துண்டுகள். அது ஏற்கனவே சாபொ1 முதல் சாபொ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக என்னை போலிசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

உமேஷ்பாண்டி என்பவர் எனது மாமா மகனாவார். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். சம்வத்தன்று நான் காய்கறி வண்டியை ஓட்டுவதற்காக அதிகாலையில் வேலைக்கு சென்று வந்துவிட்டேன். உமேஷ்பாண்டி என்பவர் மணலி பேருந்து நிறுத்தத்தில் பழக்கடை நடத்தி வருகிறார். அவர் காலை 10 மணியளவில் கடையை திறந்து இரவு 10 மணி வரை கடையை நடத்துவார். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தனர். சம்பவம் நடந்த அன்று போலிசார் என்னை விசாரித்தனர். நேரம் எனக்கு நினைவில்லை. போலிசார் என்னை விசாரித்தபோது நான் சீரான நினைவில் இல்லை என்றால் சரிதான. போலிசார் என்னை விசாரித்தபோது நானும் உமேஷ்பாண்டியும் செய்துவரும் வேலைகளை குறித்து தெரிவிக்கவில்லை. சம்பவம் நடந்த இடம் என்எஸ்கே தெருவின் அருகே அமைந்துள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது நானும் உமேஷ்பாண்டியும் சம்பவம் இடமான காலி மனைக்கு எப்போதாவது செல்வோம் என கூறினேன். போலிசார் பதிவு செய்த எனது வாக்குமூலத்தில் நானும் உமேஷ்பாண்டியும் சம்பவம் இடமான காலி மனைக்கு அடிக்கடி செல்வோம் என குறிப்பிடப்பட்டிருந்தால் அது சரிதான். எனது மாமா ஜெயராஜ் என்பவர் சம்பவம் நடந்த காலி மனையை பாஸ்கரன் என்பவரிடமிருந்து கிரையம பெற்றதால எதிரிகள அங்கு வருவதற்கு உரிமையில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த காலிமனைக்கு நானும் உமேஷ்பாண்டி என்பவரும் மது அருந்துவதற்காக அடிக்கடி அங்கு செல்வோம் என்றும் அந்த சமயங்களில் அருகேயிருந்த வீட்டிலிருந்த பெண்களை பார்த்து கிண்டல் பேசிவந்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் சமயத்தில் நாங்கள் சம்பவ இடத்தில் மது அருந்திவிட்டு பெண்களை கேலி செய்துகொண்டிருந்ததை குறித்து எங்களிடம் கேட்டனர் என்றும் நாங்கள் தான் அவர்களிடம் தகராறில்

ஈடுபட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக பூங்கொடி என்பவர் எனக்கு எதிராகவும் உமேஷ்பாண்டி என்பவருக்கு எதிராகவும் புகாரளித்தார் என்றால் அது பொய்யான புகார் ஆகும். நான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் கையொப்பமிட்டதாக எனக்கு நினைவில்லை. நான் சொன்னவாறு சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றும் நானும் உமேஷ்பாண்டி என்பவரும் குடி போதையில் தகராறு செய்து கீழே விழுந்ததால்தான் எங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும் எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. உமேஷ்பாண்டி என்பவர் என்னை பீர்பாட்டிலால் தாக்கியதால்தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.